கூட்டம் எண் – 10 / 2022 ஆரணி நகராட்சி

நாள் : 27.03.2023.

**சாதாரணக் கூட்டம் அறிவிப்பு**

30.03.2023 வியாழன் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்,
ஆரணி நகராட்சி.

**திருக்குறள்**

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு

( அதிகாரம் 8 – 75)

பொருள்கள்

01. நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2023 மாதக் குறிப்பு

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்

02. நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2023 மாதக்குறிப்பு

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்

03. இந்நகராட்சியின் 2022 – 2023 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம் மற்றும் 2023 – 2024 ஆம் ஆண்டின் உத்தேச வரவு செலவு திட்டம் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(கோப்பு எண். 155/பி1/2023)

04. ஆரணி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் 01.04.2023 முதல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் துய்மைப்பணிகள் 33 வார்டுகளிலும் தனியார் மயம் மூலம் மேற்கொள்ள இருப்பதால் அதற்கு ஒப்பந்தப்புள்ளி கோர 'Proposal தயார் செய்து அனுமதி பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலுர் – 12 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 ஆகிய அலுவலகங்களுக்கு துப்புரவு ஆய்வாளர் அவசர அவசியம் கருதி அலுவலக ஈப்பு வண்டி இல்லாத காரணத்தால் தனியார் வாடகை கார் மூலம் சென்று வந்தமைக்கு பிப்ரவரி 2023 1,2 மற்றும் 4,5 ஆகிய தேதிகளுக்கு கார் வாடகை ரூ. 19,200/–ஐ வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம், (2) நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
கோப்பு எண். 323/எச்1/2023)

05. ஆரணி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் ACE ஆட்டோக்களுக்கு 25.03.2023 ஆம் தேதியோடு இன்சூரன்ஸ் முடிவடைகிறது. அவை மேலும்,ஒரு ஆண்டிற்கு புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு கீழ்க்கண்டவாறு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது (1) TN 97 1839 – ரூ. 20,078/– (2) TN 97 1856 – ரூ20,023/– (3) TN 97 1833 ரூ. 20,023/– ஆக **மொத்தம் ரூ. 60,124/–**

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலம் (2) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண். 634/எச்1/2016)

06. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு C, பிளாக் எண்.6 , நரகளவை எண். 2 இல் அமைந்துள்ள 8215.5 ச.மீ " அரசு புறம்போக்கு – உயர்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம் " என்ற வகைப்பாடு கொண்ட இடத்தில் 1184 ச.மீ இடத்தை மட்டும் அறிவுசார் மையம் மற்றும் நுலகம் அமைக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறைக்கு நிலக்கிரையமின்றி நிலஉரிமை மாற்றம் செய்து அரசாணை (நிலை) எண். 73 வருவாய் மற்றும் பேரிடம் மேலாண்மை துறை ( நிலமுடிவு அலகு) , நிலமுடிவு 4 (1) , நாள் 15.02.2023 – இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது
(கோப்பு எண். 511/எப்1/2022)

07. தேசிய பசுமை தீர்ப்பாயம், உச்சநீதிமன்றம் வழக்கு எண். O.A. No. 606 / 2018 நாள் 19.11.2022 – இல் அளித்துள்ள தீர்ப்பு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 9192/SBMI/2022 , நாள் 13.01.2023 உத்திரவிற்கிணங்கவும், ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புதாரர்கள் பயன்படுத்தி வெளியேற்றப்படும் கழிவுநீர்களை நீர்வரத்து பகுதிகளான ஆறு, குளம் மற்றும் ஏரிகளில் கலந்து நிலத்தடி நீர் மாசுபடுவது காரணமாகவும் மற்றும் இதனால் சுற்றுச்சூழல் மாசு அடையும் காரணத்தினால் மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 4.00 ஏக்கர் நிலம் தேவைப்படுவதால் , ஏற்கனவே நகராட்சி வசம் வேலப்பாடி கிராமம் புல எண். 8/5 – இல் அமைந்துள்ள 1.82 ஏக்கர் பரப்பளவு இடம் போதுமானதாக இல்லாத காரணத்தால் அதன் அருகிலோ அல்லது நகராட்சி எல்லைக்கு அருகிலோ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நான்கு ஏக்கர் நிலம் நிலக்கிரமின்றி நில உரிமை மாற்றம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

நகராட்சி வசம் எற்கனவே உள்ள வேலப்பாடி குப்பைக்கிடங்கு பகுதி இடமான 1.82 ஏக்கர் இடத்திற்கு அருகாமையிலோ அல்லது நகராட்சி எல்லைக்கு அருகில் அரசு புறம்போக்கு இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 4.00 ஏக்கர் இடத்தினை நிலக்கிரையமின்றி நிலஉரிமை மாற்றம் செய்து வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்கள் மூலம் உரிய பிரேரணை சமர்ப்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் முன் அனுமதி வழங்கலாம்
(கோப்பு எண். 250/எப்1/2023)

**08. அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல்(நநி4) துறை நாள்:03.07.2007–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.15316/2016/ஆர்3நாள்:30.11.2016–ன்படியும் 9 ஆண்டுகள் குத்தகை முடிவு அடைந்துள்ள கடைகளுக்கு வாடகை மறுநிர்ணயம் செய்து** இந்நகர மன்ற தீரமான எண்:183 நாள்.28.02.2017–ன்படி 01.04.2017 முதல் அறிவிப்பு கடிதம் வழங்கி நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது . அவ்வாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து கடை

குத்தகைதாரர்கள் சென்னை உயர் நீதிமன்ற Writ Petition தாக்கல் செய்யப்பட்டுள்ளதில் தள்ளுபடி செய்யப்பட்டது. தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கின்மீது மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டு, வழங்கப்பட்ட தீர்ப்புரைகளில் நகராட்சி ஆணையாளர் தலைமையில் குழு அமைத்து குத்தகை தொகை மறு நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளதன் அடிப்படையில் ஆணையாளர் ஆரணி நகராட்சி அவர்களின் 25.01.2019ம் தேதிய ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் குழு அமைக்கப்பட்டு ஏற்கனவே உயர்வு செய்யப்பட்ட வாடகை தொகையை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புகளின் பேரில் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் ஒப்புதல் கோரப்பட்டது, அதன்படி நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களால் 05.03.2019 ம் தேதி அன்று மண்டல குழு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது இடைக்கால உத்தரவாக 50% , 70% எனவாடகை செலுத்த கோரி ஆணையிடப்பட்டதில் மேற்படி தொகை வைப்பு தொகையாக ( Security deposit Lease –3402001) என்ற தலைப்பில் வைப்பு தொகை பதிவேட்டில் வரவாக்கம் செய்யப்பட்டுள்ளது , 1.04.2017 முதல் 31.03.2021 வரை வசூலிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகை முழுவதையும் செலுத்த கோரி தீர்ப்பளிக்கப்பட்டது, அதன்படி குத்தகைதாரர்கள் செலுத்திய வைப்புத் தொகையில் ஈடு செய்யப்பட்டது. இருப்பினும் 01.04.2017 முதல் எழுப்பப்பட்டகேட்பு தொகையும் மண்டல குழு ஒப்புதல் அளிக்கப்பட்டு மறு நிர்ணயம் செய்யப்பட்ட கேட்பு தொகையும் கணினியில் சேர்ந்து வருவதால் கேட்பு அறிவிப்பில் தொகை மாறுபடுகின்றது , குத்தகைதாரர் வாடகை செலுத்திய விவரம் பின்வருமாறு :

| வ. எண் | பெயர்/ கடை எண்/ வரிவிதிப்பு எண். | குத்தகைதாரர் செலுத்த வேண்டிய கேட்பு தொகை – ரூ | குத்தகைதாரர் செலுத்தப்பட்ட தொகை – ரூ | குத்தகைதாரர் செலுத்த வேண்டிய நிலுவை – ரூ | கேட்பு அறிவிப்பு நிலுவை – ரூ | கேட்பு கடைகளிள் இருந்து நீக்கம் செய்ய வேண்டிய வித்தியாசம் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| **பெரியார் மாளிகை கடை( 01.04.2017 முதல் 28.02.23)** | | | | | | |
| 1. | A.S.K.சுபானி, கடை எண்.2 038/18 | 856050 | 762859 | 93191 | 131951 | 38760 |
| 2 | A. தேவகுமார், கடை எண். 11C 038/30 | 379606 | 379606 | 0 | 5679 | 5679 |
| 3. | M.சிவநேசன், கடை எண் .11B 038/29 | 856050 | 856050 | 0 | 56010 | 56010 |
| 4. | P. ஜெயசங்கர், கடை எண்.8, 038/107 | 856050 | 856050 | 0 | 66928 | 66928 |
| 5. | V. அருணாசலம் கடை எண்.8, 038/24 | 856050 | 856050 | 0 | 55855 | 55855 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | A . ரபீக், கடை எண்.3 – 038/19 | 856050 | 856050 | 0 | 61434 | 61434 |
| 7. | S.M.பூபாலன், பழைய மார்கெட் பில்டிங் கடை எண். 14 | 855604 | 855604 | 0 | 16420 | 16420 |
| புதிய பேருந்துநிலை கடை( 01.04.2017 முதல் 28.02.23) | | | | | | |
| 8. | பனேசாயபு, கடை எண். 2A 038/183 | 436305 | 274980 | 161325 | 317420 | 154580 |
| பெரியார் மாளிகை – ( 01.04.2017 முதல் 28.02.23) | | | | | | |
| 9. | சாலம்மாள், கடை எண்.9–038/108 | 503643 | 503643 | 0 | 196221 | 196221 |
| பெரியார் மாளிகை – ( 01.04.2017 முதல் 31.03.23) | | | | | | |
| 10. | K. செங்கீரன், கடை எண்.10 038/26 | 869363 | 709610 | 159753 | 43195 | 43195 |
| 11. | P. ராஜேஷ், கடை எண்.9 038/25 | 869363 | 589790 | 279573 | 288148 | 8575 |
| 12 | P. பசுபதி கடை எண்.11 – 038/111 | 869363 | 656355 | 213008 | 316679 | 103671 |
| 13. | C. செல்வம், கடை எண். 11A 038/28 | 869363 | 549851 | 319512 | 324652 | 5140 |
| புதிய பேருந்துநிலை கடை ( 01.04.2017 முதல் 31.03.2023 ) | | | | | | |
| 14, | P. பாக்கியராஜ். கடை எண். 2 038/127 | 283578 | 201080 | 82514 | 96939 | 14441 |
| | | | | | மொத்தம் | 826909 |

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பட்டியலில் உள்ள வித்தியாசம் தொகை ரூ.8,26,909/– ஐ கணினியிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் ஏற்கலாம் (கோப்பு எண். 741/அ3/2022)

**09 . ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கடைகள் அரசாணை நிலை எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி4) துறை நாள்:03.07.2007–ன்படி வாடகை உயர்வு செய்யப்பட்டதின் காரணமாக கீழ் கண்டுள்ள குத்தகைதாரர்கள் நிலுவை தொகை செலுத்தாமல் சென்றவர்களின் கேட்பு மற்றும் பழைய மார்க்கெட் மேல்மாடி பழுதடைந்துள்ள கடைகளின் கேட்பு கணினியில் தொடர் கேட்பு 2017–2018 முதல் எழுப்பப்பட்டு வருவதை 31.03.2023 அன்றுடன் நிறுத்தம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.**

| வ. எண் | பெயர் மற்றும் வரிவிதிப்பு எண் | நிலுவைத் தொகை – ரூ |
|---|---|---|
| பெரியார் மாளிகை மேல்மாடிக் கடைகள் | | |
| 1 | C.சண்முகம் பெரியார் – கடை எண். 9 A / 038/109 | 454295 |
| 2. | S.இளங்கோவன் கடை எண். 14 , 038/115 | 315125 |
| 3. | S.பாபு பெரியார், கடை எண். 15 . 038/116 | 523277 |
| 4. | V.மோகனவேலு – கடை எண்.22 , 038/123 | 531306 |
| 5. | G.பழனி– கடை எண். 24 , 038/125 | 423096 |
| 6. | R.ராஜேஷ் – கடை எண். 30 , 038/131 | 624980 |
| 7. | S.பழனி – கடை எண். 31 , 038/132 | 704455 |
| 8. | S.ஞானவெல் – கடை எண். 32 , 038/133 | 704455 |
| 9. | N.செல்வராஜன் – கடை எண். 36, 038/137 | 482240 |
| 10. | K.ராஜமூர்த்தி – கடை எண். 37 , 038/138 | 376237 |
| 11. | N.செல்வராஜன் – கடை எண். 38, 038/139 | 444738 |
| 12. | V.செந்தில்குமார் – கடை எ. 39 , 038/140 | 613416 |
| பழைய மார்கெட் பில்டிங்க கடைகள் | | |
| 13. | கௌஸ்பாஷா – கடை எண். 32 , 03875 | 464690 |
| 14. | A.அமீது – கடை எண். 35 , 038/79 | 665628 |
| 15. | L.ராஜேந்திரன் – கடை எண். 38, 038/82 | 538825 |
| பழைய பேருந்து நிலைய கடை | | |
| 16. | A.ஷர்மிளாபேகம் – கடை எண். 13 , 038/537 | 513752 |
| IUDP கடைகள் | | |
| 17. | ரகமத்பி – கடை எண். 177 , 038/ 401 | 667287 |
| 18. | A.S.வேலு – கடை எண். 178 , 038/402 | 581735 |
| 19. | P.T.சமந்தம்– கடை எண். 179 , 038/403 | 780043 |
| 20. | G.சங்கர் – கடை எண். 184, 038/408 | 483184 |
| 21. | N.குமார் – கடை எண். 187 , 038/142 | 766307 |
| 22. | G.செல்வராசு – கடை எண். 188, 038/413 | 540331 |
| 23. | G.குமார் – கடை எண். 189 , 038/ 414 | 726909 |
| பழைய மார்கெட் பில்டிங் மேல்மாடிக் கடைகள் | | |
| 24. | M.சங்கீதா ,– கடை எண். 20 / 038/149 | 510735 |
| 25. | S.வாசு – கடை எண். 21 , 038/150 | 285023 |
| 26. | J.குணசேகரன் – கடை எண். 23 , 038/152 | 323389 |
| 27. | D.கண்ணன் – கடை எண். 25 , 038/155 | 545924 |
| 28. | M.சங்கீதா – கடை எண். 37 , 038/167 | 546666 |
| 29. | P.வெங்கடேசன் – கடை எண். 38 038/168 | 35418 |
| 30. | G.பிரபாகரன் – கடை எண். 4 , 038/92 | 532792 |
| 31. | M.முனுசாமி – கடை எண். 5 , 038/93 | 520000 |

| | | |
|---|---|---|
| 32. | M.ராஜபெருமல் – கடை எண். 6 , 038/94 | 390071 |
| 33. | G. பிரபாகரன் – கடை எண். 9 , 038/97 | 519909 |
| புதிய பேருந்து நிலையம் பெட்டிக்கடை | | |
| 34. | B.A. முகமது அலி – பெட்டிக்கடை – 038/31 | 136118 |
| 35. | J.அன்பழகன் வண்டிமேடு கடை எண்1 , 038/43 | 471496 |
| | **மொத்தம்** | 17743852 |

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம் .
**(கோப்பு எண்.** 2. கணினியில் தொடர் கேட்பு எழுப்பப்பட்டு வருவதை 31.03.2023
**706/அ3/2021** அன்றுடன் நிறுத்தம் செய்ய மன்றம் ஏற்கலாம்

10. இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் துய்மைப்பணியாளராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 25.07.2022 அன்று இறந்துவிட்ட திரு. ஆ. பழனி என்பவருக்கு (1) சிறப்பு சேமநல நிதி அசல் ரூ. 3330/– (ம) சிறப்பு சேமநல நிதி அசலுக்கான வட்டி ரூ. 8,400/– ஆக மொத்தம் ரூ. 11,730/– வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதி அளிக்கலாம்.
( கோப்பு எண். 2150/பி2/2022)
11. இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் நகர சுகாதார செவிலியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 06.12.2022 அன்று இறந்துவிட்ட திருமதி. கே. லட்சுமி என்பவருக்கு (1) சிறப்பு சேமநல நிதி அசல் ரூ. 2960/– (ம) சிறப்பு சேமநல நிதி அசலுக்கான வட்டி ரூ. 14753/– ஆக மொத்தம் ரூ. 17,713/– வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதி அளிக்கலாம்.
( கோப்பு எண். 79/பி2/2023)
12. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் மின்கம்பியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31.01.2023 அன்று பணி ஓய்வுபெற்ற திரு. ந. வளையாபதி என்பவருக்கு (1) சிறப்பு சேமநல நிதி அசல் ரூ. 2960/– (ம) சிறப்பு சேமநல நிதி அசலுக்கான வட்டி ரூ. 22977/– , நிர்வாகப் பங்கு தொகை ரூ. 10,000/– ஆக மொத்தம் ரூ. 35,937/– வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதி அளிக்கலாம்.
( கோப்பு எண். 259/பி2/2023)

13. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் காவலராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 28.02.2023 அன்று பணி ஓய்வுபெற்ற திரு. ப. ஆறுமுகம் என்பவருக்கு (1) சிறப்பு சேமநல நிதி அசல் ரூ. 2960/– (ம) சிறப்பு சேமநல நிதி அசலுக்கான வட்டி ரூ. 16,010/– , நிர்வாகப் பங்கு தொகை ரூ. 10,000/– ஆக மொத்தம் ரூ. 28,970/– வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதி அளிக்கலாம்.
( கோப்பு எண். 438/பி2/2023)

14. ஆரணி நகராட்சியில் குடிநீர் கட்டணம் 54 குழாய் இணைப்புகளில் 2019–2020 ஆம் ஆண்டு முதல் துண்டிப்பு செய்யப்பட்டது. கணினியில் நீக்கம் செய்யப்படாமல் , கணினியில் நீண்டகாலமாக நிலுவையில் தொடர்ந்து கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. மேலும், கணினியில் நீக்கம் செய்யப்படாமல் உள்ளது.

மேற்படி நிலுவைத் தொகை ரூ. 711571/– வசூலிக்கப்படாத நிலையில் உள்ளது. இனி வரும் காலங்களில் துண்டிப்பு செய்யப்பட்டுள்ள இணைப்புகளின் கேட்புகள் எழாமல் இருக்க கணினியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : (1) மன்றம் அனுமதி அளிக்கலாம் . (2) மேற்படி நிலுவைத் தொகையை நீக்கம் செய்ய ( Write off) மன்றம் அனுமதிக்கலாம்.
( கோப்பு எண். 808/இ2/2018)

15. இந்நகராட்சிக்கு 2022 – 2023 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், படிவங்கள் போன்றவை தற்போது இருப்பு இல்லாததால் இப்பொருட்களை அவசர அவசியம் கருதி திருவண்ணாமலை மாவட்டம் எழுதுபொருள் மற்றும் அச்சக சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட், ANK காம்பளக்ஸ், திருக்கோவிலூர் ரோடு, திருவண்ணாமலை என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ள ஏற்படும் தோராயன செலவினம் ரூ. 5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி அனுமதி எதிர்நோக்கி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கொள்முதல் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

16. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்துவரியுடன் சேர்த்து வசூலிக்கப்படும் SUC சுகாதார பயணர் கட்டணம் சொத்துவரியைவிட அதிகமாக 2017 – 2018 – கணக்கீடு தவறுதலாக அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் வரிவிதிப்புதாரர்கள் அதன் காரணமாக சொத்துவரியை நகராட்சிக்கு செலுத்தாமல் உள்ளனர் என வருவாய்உதவியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனால் நகராட்சி வசூலில் பின்தங்கி உள்ளது . எனவே, பட்டியலில் கண்டுள்ள வரிவிதிப்புகளில் உள்ள SUC சுகாதார பயணர் கட்டணத்தை தொடர்புடைய வார்டு வருவாய் உதவியாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலரின் ஆய்வு அறிக்கை அடிப்படையில் குறைக்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** : மன்றம்அனுமதிக்கலாம்.
( கோப்பு எண். 434/அ1/2022)

17. தேசிய பசுமை தீர்ப்பாயம் உச்சநீதிமன்றம் வழக்கு எண். O.A.No. 606/2018 – நாள் 19.11.2022 – இல் அளித்துள்ள தீர்ப்பு மற்றும் நகராட்சிநிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 9192/22/SBMI, நாள் 13.01.2023 – இன் உத்தரவிற்கிணங்கவும் , ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புதாரர்கள் பயன்படுத்தி வெளியேற்றப்படும் கழிவுநீர்களை நீர்வரத்து பகுதிகளான ஆறு, குளம் மற்றும் ஏரிகளில் கலந்து நிலத்தடி நீர் மாசுபடுவது காரணமாகவும் மற்றும் இதனால்

சுற்றுச்சூழல் மாசுஅடையும் காரணத்தினால் மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ள கழிவுநீர் நீரேற்று நிலையம் அமைக்க நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் ஏதும் இல்லாத காரணத்தினால் நகராட்சி மூலம் கூட்டு புலதணிக்கை மேற்கொள்ளப்பட்டு பொதுப்பணி துறைக்கு சொந்தமான இரு இடங்கள் மற்றும் வருவாய் துறைக்கு சொந்தமான இரு இடங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவே, பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த் துறை அவர்களிடம் தடையில்லா சான்று பெற்று பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரம் நகரமன்றத்திற்கு தெரிவிக்கப்படுகிறது.

1. பையூர் ஏரிப்பகுதி – புல எண். 2 , உத்தேசிக்கப்பட்டுள்ள கழிவு நீரேற்று நிலையம் அமைக்க ( இந்திரா நகர் பகுதி ) ஏரி என்னும் வகைப்பாட்டில் உள்ள 2500 ச. மீ இடம் மற்றும்

2. திருமலை சமுத்திரம் ஏரிப்பகுதி – வார்டு B . பிளாக் எண் .8 , நகரளவு எண் 5 மற்றும் 2/1 , 3 உத்தேசிக்கப்பட்டுள்ள கழிவுநீரேற்று நிலையம் அமைக்க ( பாரதியார் தெரு பகுதி) ஏரி என்னும் வகைப்பாட்டில் உள்ள 900 ச.மீ

மேற்படி இரண்டு இடங்களும் பொதுப்பணித் துறைக்கு சொந்தமானது. மேலும்,

1. அனந்தபுரம் பகுதி ( குட்டை ) – வார்டு A. பிளாக் எண். 3 , நகரளவை எண். 3–1 உத்தேசிக்கப்பட்டுள்ள கழிவுநீரேற்று நிலையம் அமைக்க குட்டை என்னும் வகைப் – பாட்டிலுள்ள 900 ச. மீ இடம்

2. அருணகிரிசத்திரம் பகுதி ( குட்டை ) – வார்டு F , பிளாக் எண். 4, நகரளவை எண். 7/3 – உத்தேசிக்கப்பட்டுள்ள கழிவுநீரேற்று நிலையம் அமைக்க குட்டை என்னும் வகைப்பாட்டில் உள்ள 900 ச. மீ இடம்.

மேற்படி இரண்டு இடங்களும் வருவாய் துறைக்கு சொந்தமானது. எனவே, தேசிய பசுமை தீர்ப்பாயம் அளித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில் திட்டப்பணிகளை துவக்க ஏதுவாக வருவாய்துறை மற்றும் பொதுப்பணித்துறை வசம் தடையில்லா சான்று பெற்று உரிய விதிகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு, ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 250/எப்1/2023)

18. அரசாணை (நிலை)எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள் : 30.08.2019ன்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக செய்தி நாள் 02.03.2023 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர்–12 அவர்களின் நே.மு.க.எண்568/2023/அ1 நாள் 02.03.2023ல் தெரிவித்துள்ளவாறு, மேற்குறிப்பிட்டுள்ள அரசாணையில் நகராட்சிகளை நிலை உயர்த்த கீழ்கண்டவாறு ஆண்டு வருமானம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது

| | |
|---|---|
| 1. சிறப்பு நிலை | ரூ. 15.00 கோடிக்கு மேல் |
| 2. தேர்வு நிலை | ரூ. 9.00 கோடிக்கு மேல் ரூ,15.00 கோடிக்குள் |
| 3. முதல் நிலை | ரூ.6.00 கோடிக்கு மேல் ரூ.9.00 கோடிக்குள் |
| 4. இரண்டாம்நிலை | ரூ. 6.00 கோடிக்குள் |

மேலும், இந்நகராட்சியின் கடந்த மூன்று ஆண்டுகளில் தணிக்கை செய்யப்பட்டதின்படி, வருட வருமானம் பின்வருமாறு :–

**ரூ. கோடியில்**

| | |
|---|---|
| 2019–2020ஆம் ஆண்டு | ரூ.15.92 |
| 2020–2021ஆம் ஆண்டு | ரூ. 15.15 |
| 2021–2022ஆம் ஆண்டு | ரூ.12.35 |
| ஆக இந்நகராட்சியின் மூன்று ஆண்டு சராசரி வருமானம் | ரூ. 14.47 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை வரையறையின்படி, தற்போது இந்நகராட்சியின் கடந்த மூன்றாண்டுகளின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.14.47 கோடியாக உள்ளது. தற்போது இந்நகரராட்சி முதல்நிலை நகராட்சியாக உள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணையின்படி, தற்போது முதல்நிலை நகராட்சியிலிருந்து தேர்வுநிலை நகராட்சியாக நிலை உயர்த்த அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அவசர அவசியம் கருதி நகரமன்றதலைவரின் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.470/சிச1/23

19. ஆரணி நகராட்சியின் வார்டு 1 – இல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022 – 2023 திட்டத்தின் கீழ் ரூ48.00 லட்சம் மதிப்பீட்டில் பூங்கா அபிவிருத்தி பணிகள் நடைபெற்ற வருகிறது . இப்பணியில் பூங்கா பணிக்குரிய இடம் சாலையைவிடமிக தாழ்வாக அமைந்துள்ளது.இதன் காரணமாக மழைக்காலங்ளில் மழை நீரானது குளம் போல் தேங்கியுள்ளது . பூங்கா பகுதியில் தற்போது சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதர பணிகள் செய்யப்பட வேண்டும். மக்கள் பயன்பாட்டிற்கு வரும்போது மழைநீர் தேங்கினால் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும். மேலும், பூங்கா பகுதியில் நடப்படும் செடி, மரங்கள், விளையாட்டு பொருட்கள், மின்சாதனங்கள் பாழ்படும் நிலை அடையக் கூடும் என்பதால் , இப்பூங்கா பகுதியினை சாலை மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும் . இவ்வாறு உயர்த்தினால் மட்டுமே மழைநீர் பூங்கா பகுதியினைவிட்டு வெளியேறும் தாழ்வான பகுதியினை மண் கொண்டு உயர்த்துவதற்கு இப்பணிக்கான மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படவில்லை. எனவே, அவசியம் இப்பணியினை செய்து முடித்தால் மட்டுமே இத்திட்டப்பணி மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதால் இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 2.20 லட்சம் நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம்

( ந.க.எண். 2098/இ1/2022)

20. ஆரணி நகராட்சியின் வார்டு 2 – இல் கே.பி.கே நகர் பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2022 – 2023 திட்டத்தின் கீழ் பூங்கா அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்குரிய பூங்கா இடமானது சாலையைவிடமிக பள்ளமாக உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி விடுகிறது. இதன் காரணமாக பூங்கா கட்டுமான பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும், பூங்கா பணியில் சுற்றுச்சுவர் கட்டுமானப் பணி ஏற்கனவே கட்டப்பட்டு வருகிறது. இப்பணியில் நடைபாதை, இருக்கை வசதி , மரம் செடி நடும் பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளது. இப்பணிகள் முடிவுற்ற பின் தாழ்வான பகுதியாக பூங்கா பகுதி இருந்து அப்பகுதியில் மழைநீர் தேங்கி நின்றால் செடி, மரம், விளையாட்டு பொருட்கள் வீணாகிவிடும் என்பதாலும், மழைநீர் தேங்கி நின்றால் மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும் என்பதாலும், இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடில் தாழ்வான பூங்கா பகுதியினை மண் கொண்டு உயர்த்துவற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை.எனவே, மண்கொண்டு இப்பகுதியினை உயர்த்தினால் மட்டுமே இத்திட்டம் முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதால் இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1.15 லட்சம் நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம்

( ந.க.எண்.175/இ1/2022)

21. ஆரணி நகராட்சியில் அனைத்து வீடுகளுக்கும் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் 7427 எண்ணிக்கையில் மதிப்பீடு தொகை ரூ. 259.00 இலட்சத்தில் வழங்க டூபிட்கோ நிதி நிறுவனத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட வட்டியில்லா கடன் தொகை ரூ. 253.45 இலட்சம் , நகராட்சி பங்களிப்பு தொகை ரூ. 5.55 இலட்சம் பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கு நகராட்சி நகரமன்ற தீர்மான எண். 180, நாள் 14.12.2018 இல் அங்கீகரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது . தற்போது மேற்காணும் பணிக்கு பகுதி பட்டியல் தொகை ரூ. 11,79,454/– ஐ ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டியுள்ளது. டூபிட்கோ நிதி நிறுவனத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட வட்டியில்லா கடன் தொகை பெற நகராட்சியின் நிதி நிலைமை மற்றும் கடன் தொகை திரும்ப செலுத்துவதில் சிரமமாக இருப்பதினால் மேற்காணும் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம் . 2. பணியின் அவசரம் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| நகராட்சி அலுவலகம், | நகரமன்ற தலைவர், |
| ஆரணி | ஆரணி நகராட்சி. |

நாள் : 27/03/2023